# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 218/மா/2024**

**நாள்: 22.04.2025**

| | | |
|---|---|---|
| திரு. M.கமலக்கண்ணன்,<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–14<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, கதவு எண் 24B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. கமலக்கண்ணன் என்பவரின் 30.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.09.2024 அன்று பெறப்பட்டு 218/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, கதவு எண் 24B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. கமலக்கண்ணன் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“எனது அம்மாவின் பெயரில் வீட்டு கதவு எண். 17 வழங்க வேண்டியும், தவறான முறையில் வேறு ஒருவர் K. RAGMAD 14/190/04349/000 பெயரில் கொடுத்துள்ள கதவு எண் 17 ரத்து செய்து எனது அம்மாவின் பெயர் எம் எட்டியம்மாள் கதவு எண் 17 வழங்க வேண்டி திரு. வருவாய் அலுவலர் அவர்களிடம் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் பில்டிங் அவர்களிடம் 26.07.2024 மனு கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை. பிறகு 12.09.2024 மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை வருவாய்த் துறை அலுவலர் அவர்களிடம் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டி, எனது அம்மாவின் பெயரில் உள்ள இடம் சென்னை–600 100, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, மனை எண்.24Bயில் உள்ளது. சொத்து வரி எண் 14/190/0584/000. எங்களுடைய இடம் சர்வே எண். 338–ல் பட்டா நிலத்தில் மனை எண் 24B ஆகும். இதே போல் சர்வே எண் 338ல் திரு. பச்சையப்பன் மனை எண் 23 ஆகும். கதவு எண் 13 மற்றும் திரு. செல்வமணி சர்வே எண் 338–ல் மனை எண் 24A ஆகும். கதவு எண் 15 சொத்து வரி எண் 14/190/04355/000. நாங்கள் அனைவரும் பட்டா நிலத்தில் இருக்கிறோம். அந்த வரிசையில் திரு. பச்சையப்பன் அவர்களின் மனை எண் 23 ஆகும். அவர்களுக்கு கதவு எண் 13 வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் திரு. செல்வமணி அவர்களின் மனை எண் 24A ஆகும்.

அவர்களின் கதவு எண் 15 வழங்கப்பட்டுள்ளது. அதன் பிறகு எனது அம்மாவின் பெயரில் உள்ள மனை எண் 24B கதவு எண் 17 வழங்க வேண்டிய கதவு எண் வழங்கவில்லை. ஆனால் எந்த ஆவணங்களும் இல்லாத வேறு ஒரு பெயரில் K. RAGMAD சொத்து வரி எண் 14/190/04349/000 பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரியில் கதவு எண் 17 வழங்கி உள்ளார்கள். 17 உள்ள நபரின் பெயரில் கதவு எண் 17 பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் எந்த ஒரு ஆவணங்கள் இல்லாமல் இருக்கும் அவர்களுக்கு எந்த அடிப்படையில் சென்னை மாநகராட்சி சொத்து வரியில் K. RAGMAD கதவு எண் 17 வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. முழு விசாரணை செய்து அவர்களின் பெயரில் உள்ள கதவு எண்ணை ரத்து செய்து அவர்கள் கதவு எண் 17 மற்றும் 17–ல் உட்பிரிவு பயன்படுத்த தடை விதித்து, என் அம்மாவின் பெயரில் எம் எட்டியம்மாள் கதவு எண் 17 வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த் துறை அலுவலகத்தில் உள்ள திரு. வருவாய் அலுவலர் அவர்களுக்கு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.11.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, மண்டல அலுவரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, மண்டல அலுவலர் தனது 11.03.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"தனியரின் 26.07.2024 நாளிட்ட கடிதம் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வீடுகளுக்கான கதவு எண்ணானது பெருநகர சென்னை மாநகராட்சியின் நடைமுறைப்படி வழங்கப்படுகிறது. தனியரின் மனுவில் கோரும் கதவு எண் 17 ஆனது தனியரின் அருகாமையிலுள்ள வீட்டிற்கு அன்றைய பள்ளிக்கரணை பேரூராட்சியானது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணையும் முன்பே பள்ளிக்கரணை பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே கதவு எண் 17 என்ற ஒரே எண் இரு வேறு வீடுகளுக்கு வழங்க இயலாது. எனவே, இந்நிகழ்வில் தனியரின் கோரிக்கையை ஏற்க இயலாது என்ற விவரத்தை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 08.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"எனது அம்மாவின் பெயரில் உள்ள இடம் மண்டலம் 14 வார்டு எண். 190 வரதராஜபுரம் மெயின் ரோடு, பள்ளிக்கரணை, சென்னை–100. சொத்து வரி எண்.14/190/05843/000 அமைந்துள்ளது. எங்களுடைய மனை எண்.24B ஆகும். எனக்கு முன்னால் திரு.செல்வமணி அவர்கள் மனையின் எண். 24A, கதவு எண்.15, அதற்கு முன்னால் உள்ள பச்சையப்பன் பெயரில் மனை எண்.23 ஆகும். அவர்களின் கதவு எண்.13 ஆகும். இந்த வரிசையில் பார்த்தால் எங்களுக்கு கதவு எண்.17 வர வேண்டும். ஆனால் எங்கள் இரண்டு வீடுகள் உள்ள பெயரில் தாங்கள் கதவு எண்.17 என வழங்கப்பட்டுள்ளது. அதனை மாற்றி என் அம்மாவின் பெயரில் உள்ள கதவு எண்.17ஐ மாற்றி தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

கதவு எண்.17, K.Ragmad இருப்பவர் அவர்களுக்கு எந்த ஒரு ஆவணங்கள் இல்லாத நிலையில் சொத்துவரி எண்.14/190/04349/000 வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் ஆவணங்களை கள ஆய்வு செய்து உரிய விசாரணை செய்து ஆவணங்களின் அடிப்படையில் கதவு எண்.17–ல் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் 08.04.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

''மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வீடுகளுக்கான கதவு எண்ணானது பெருநகர சென்னை மாநகராட்சியின் நடைமுறைப்படி வழங்கப்படுகிறது. தனியரின் மனுவில் கோரும் கதவு எண்.17 ஆனது தனியரின் அருகாமையிலுள்ள வீட்டிற்கு அன்றைய பள்ளிக்கரணை பேரூராட்சியானது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணையும் முன்பே பள்ளிக்கரணை பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே கதவு எண்.17 என்ற ஒரே எண் இரு வேறு வீடுகளுக்கு வழங்க இயலாது.

இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சியால் அப்பகுதியில் கதவு இலக்க எண்கள் அளிக்க மறு ஆய்வு மேற்கொள்ளும் போது மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கும் வழி காட்டுதலின்படி உரிய கதவு எண் மனுதாரரின் வீட்டிற்கு அளிக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள்ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், திருமதி எம் எட்டியம்மாள் என்ற தனது அம்மாவின் பெயரில் உள்ள இடம் சென்னை 600 100, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, சர்வே எண். 338–ல் பட்டா நிலத்தில், மனை எண்.24Bயில் உள்ளது எனவும், சொத்து வரி எண் 14/190/0584/000 எனவும், இதே போல் சர்வே எண் 338–ல் திரு. பச்சையப்பன் என்பவரின் மனை எண் 23, கதவு எண் 13 வழங்கப்பட்டுள்ளது எனவும், திரு. செல்வமணி என்பவரின் மனை எண் 24A, கதவு எண் 15 வழங்கப்பட்டுள்ளது எனவும், அதன் பிறகு மனுதாரரின் அம்மாவின் பெயரில் உள்ள மனை எண் 24B கதவு எண் 17 வழங்க வேண்டிய கதவு எண் வழங்கவில்லை எனவும், ஆனால் எந்த ஆவணங்களும் இல்லாத வேறு ஒரு பெயரில் K. RAGMAD என்பவரின் சொத்து வரி எண் 14/190/04349/000 எனவும், அன்னாருக்கு கதவு எண் 17 வழங்கப்பட்டு, அக்கதவு எண்ணை பயன்படுத்தி வருகிறார்கள். எனவே விசாரணை செய்து, K. RAGMAD என்பவருக்கு வழங்கப்பட்ட கதவு எண் 17–ஐ ரத்து செய்யுமாறும் மற்றும் கதவு எண் 17 மற்றும் 17–ன் உட்பிரிவுகளையும் அன்னார் பயன்படுத்த தடை விதிக்கும்படியும், தனது அம்மாவின் மேற்கண்ட விலாசத்தில் உள்ள வீட்டிற்கு கதவு எண் 17–ஐ வழங்கும்படியும் தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் வீடுகளுக்கான கதவு எண்ணானது பெருநகர சென்னை மாநகராட்சியின் நடைமுறைப்படி வழங்கப்படுகிறது எனவும், மனுதாரரின் மனுவில் கோரும் கதவு எண்.17 ஆனது, அன்னாரது அருகாமையிலுள்ள வீட்டிற்கு கதவு எண் அன்றைய பள்ளிக்கரணை பேரூராட்சியானது, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணையும் முன்பே பள்ளிக்கரணை பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே கதவு எண்.17 என்ற ஒரே எண் இரு வேறு வீடுகளுக்கு வழங்க இயலாது எனவும், இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சியால் அப்பகுதியில் கதவு இலக்க எண்கள் அளிக்க மறு ஆய்வு மேற்கொள்ளும் போது மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கும் வழி காட்டுதலின்படி உரிய கதவு எண் மனுதாரரின் வீட்டிற்கு அளிக்கப்படும் என்பது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரால் கோரப்படும் வீட்டு எண் திருமதி எம் எட்டியம்மாள் என்பவரின் பெயரில் உள்ள இடம் சென்னை 600 100, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, சர்வே எண். 338–ல் பட்டா நிலத்தில், மனை எண்.24B–க்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால் அப்பகுதியில் கதவு இலக்க எண்கள் அளிக்க மறு ஆய்வு மேற்கொள்ளும் போது மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கும் வழி காட்டுதலின்படி உரிய கதவு எண் மனுதாரரின் வீட்டிற்கு அளிக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு, இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. கமலக்கண்ணன்,
மனை எண் 24B,
வரதராஜபுரம் மெயின்ரோடு,
பள்ளிக்கரணை,
சென்னை 600 100.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு,
சென்னை–600 091.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032